# திருநின்றவூர் நகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறைகள்

**முன்னிலை:-** திருமதி.ஜீவிதா, **B.Sc (Agri).,**

**ந.க.எண். 139/2026/எப்1** **நாள்: 08.06.2026**

**பொருள்:-** மனைப்பிரிவு – திருநின்றவூர் நகராட்சி– திருநின்றவூர் அ கிராமம் – சர்வே எண்.144/8B மற்றும் 144/9–ல் **6450 ச.மீ** பரப்பளவில் உள்ள குடியிருப்பு மனைப் பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கி உத்திரவிடுதல் – தொடர்பாக.

**பார்வை:-**

1. உறுப்பினர் செயலர், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அவர்களின் கடித எண்.CMDA/PP/Layout–1/0241/2025, நாள்.14.01.2026.
2. ஆவடி சார்பதிவாளர் அவர்கள் அலுவலகத்தில் மனுதாரர் தானமாக சாலை இடத்தினை பதிவு செய்த தானபத்திரம் எண். 11246/2025, நாள்.22.07.2025.
3. நகர் மன்ற தீர்மான எண்–923, நாள் 06.03.2026

*******

**உத்தரவு :-**

திருநின்றவூர் நகராட்சிக்குட்பட்ட திருநின்றவூர் அ கிராமம் சர்வே எண். 144/8B மற்றும் 144/9–ல் **6450 ச.மீ** நிலப்பரப்பில் உள்ள குடியிருப்பு மனைப்பிரிவிற்கு ஒப்புதல் வேண்டி திரு.சௌந்தர்ராஜன் மற்றும் திருமதி. கோதைநாயகி என்பவரால் உறுப்பினர் செயலர், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம், சென்னை அவர்களுக்கு விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டது.

மேற்படி மனுதாரின் விண்ணப்பம் உறுப்பினர் செயலர், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம், சென்னை அவர்களால் பரிசீலனை செய்யப்பட்டு, பார்வை 1–ல் காணும் கடிதத்தின் படி அத்துடன் இணைக்கப்பட்டுள்ள சாலை அமைப்பு வரைபடத்தின் படி, சாலை இடத்தினை ஆவடி சார்பதிவாளர் அலுவலகத்தில் பார்வை 2–ல் கண்டுள்ளபடி திரு. சௌந்தர்ராஜன் மற்றும் திருமதி. கோதைநாயகி என்பவர் பத்திரபதிவு செய்து சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்திற்கு தானமாக ஒப்படைத்துள்ளார்.

உறுப்பினர் செயலர், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம், சென்னை அவர்களின் உத்திரவில் மனைப்பிரிவிற்கு OL–PPD/LO/0012/2026, நாள்.14.01.2026 திட்ட அனுமதி எண். OL–02572 என எண்ணிடப்பட்டு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மேலும், அனுமதியற்ற மனைப்பிரிவிற்கு இந்நகராட்சிக்கு செலுத்தப்பட வேண்டிய உரிய கட்டணங்கள் கீழ்கண்டவாறு செலுத்தப்பட்டுள்ளது.

| வ.எண் | கட்டண விவரம் | தொகை ரூ | ரசீது எண்/ நாள் |
|---|---|---|---|
| 1 | மனைப்பிரிவு கட்டணம் | ரூ. 1,95,000/- | 0002183/02.06.2026 |
| 2 | ஆய்வு கட்டணம் | ரூ. 30,000/- | 0002184/02.06.2026 |
| 3 | சுற்றுசுவர் | ரூ. 40,000/- | 0002185/02.06.2026 |
| 4 | 5 வருடவைப்பு தொகை | ரூ. 1,75,000/- | 0002186/02.06.2026 |
| 5 | கொடி நாள் | ரூ. 25,000/- | 0002187/02.06.2026 |
| 6 | Lumpsum Amount | ரூ. 30,000/- | 0002188/02.06.2026 |
| 7 | மனை உட்பிரிவு கட்டணம் | ரூ. 1,95,000/- | 0002189/02.06.2026 |
| 8 | திடக்கழிவு மேலாண்மை | ரூ. 40,000/- | 0002190/02.06.2026 |
| 9 | சென்டேஜ் கட்டணம் | ரூ. 40,000/- | 0002191/02.06.2026 |
| 10 | காலிமனை வரி | ரூ. 5,23,024/- | 0002135 to 0002138 , 0002139 to 0002145 , 0002150 to 0002167 , 0002176 to 0002181, 0002192,0002194 to 0002196/ 02.06.2026 |

## <u>நிபந்தனைகள்</u>

| | |
|---|---|
| 1 | சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும திட்ட அனுமதி எண். OL-02572, நாள்.14.01.2026 -ல் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை தவறாது கடைபிடித்தல் வேண்டும். |
| 2 | இந்நகராட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்ட இடங்களில் எக்காரணத்தை கொண்டும் ஆக்கிரமிப்பு செய்யக் கூடாது. |
| 3 | இத்துடன் இணைக்கப்பட்டுள்ள சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தால் மனைப்பிரிவு அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள விவரப்படி மனைகள் பிரித்து மாற்றம் செய்யாமல் விற்பனை செய்தல் வேண்டும் மற்றும் மனைப்பிரிவு வரைபடத்தில் தெரிவித்துள்ள நிபந்தனைகளை பூர்த்தி செய்ய வேண்டும். |
| 4 | மனைப்பிரிவு தொடர்பான இடத்தில் (புல எண்ணில்) உரிமை பிரச்சினை வருமேயானால் தாங்களே சிவில் / குற்றவியல் நீதிமன்றத்தில் தீர்வு பெற்றுக்கொள்ள வேண்டும். எந்த சூழ்நிலையிலும் நகராட்சி, சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் பொறுப்பேற்காது. |
| 5 | தவறான ஆவணம் சமர்ப்பித்து அனுமதி பெறப்பட்டது பின்னர் தெரியவந்தால் எந்த நேரத்திலும் வழங்கப்பட்ட உத்திரவு இரத்து செய்யப்படும். |
| 6 | நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.12843/2022/டிபி-2, நாள்.20.10.2022-ன் படி மனுதாரரால் ஏற்படுத்தப்பட்ட சாலை மற்றும் மழைநீர் வடிகால் வசதி போன்ற அடிப்படை வசதிகளை ஐந்து வருடங்கள் அல்லது 60 சதவிகித மனைகள் அபிவிருத்தி அடைந்தபின் இவற்றில் எது அதிக காலமோ அதுவரை முறையாக பராமரிக்கும் பொறுப்பு மனைப்பிரிவு விண்ணப்பதாரர்/ மனைப்பிரிவு உரிமையாளரைச்சாரும். |

| | |
|---|---|
| 7 | பராமரிப்பு பணிகளுக்கான மீள வழங்கக்கூடிய வைப்புத் தொகையாக ரூ.1.00 இலட்சம் ஒரு ஏக்கருக்கு அல்லது அதன் பகுதி பரப்பளவிற்கு என கணக்கிட்டு செலுத்தப்படவேண்டும். |
| 8 | பராமரிப்பு காலத்தில் பராமரிப்பு பணிகளை மனைப்பிரிவு விண்ணப்பதாரர் / மனைப்பிரிவு உரிமையாளர் மேற்கொள்ள தவறினால் மேற்காணும் பணிகள் உள்ளாட்சி வாயிலாக செய்யப்பட்டு அதற்கான தொகை மனுதாரரிடமிருந்து பெறப்பட்ட வைப்பு தொகையிலிருந்து ஈடுசெய்யப்படும். பராமரிப்பு காலம் முடிந்த பின்னர் உரிய ஆய்வுக்கு பின்னர் மீதி வைப்புத்தொகை திரும்ப வழங்கப்படும். |
| 9 | பேரிடர் காலங்களில் தங்கள் மனைப்பிரிவுகளில் ஏற்படும் பாதிப்புகளுக்கு இந்நகராட்சி எவ்வித பொறுப்பும் ஏற்காது. |

எனவே, திரு. சௌந்தர்ராஜன் மற்றும் திருமதி. கோதைநாயகி என்பவருக்கு மேற்கண்ட இடத்தில் குடியிருப்பு மனைப்பிரிவு அமைக்க மேற்காணும் நிபந்தனைக்குட்பட்டு மனைப்பிரிவு அனுமதி வழங்கப்படுகிறது.

08/06/26.

ஆணையாளர்
திருநின்றவூர் நகராட்சி

8/6/26

**பெறுநர்:-**

S.Soundirarajan (ம) L.Kothai Nayagi,
No.63, Karuneegar Street,
Thiruninravur-602024.

.

**நகல் பணிந்தனுப்படுகிறது:-**

உறுப்பினர் - செயலர், சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம், சென்னை.